முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மாசி மாதம் 07 திகதி முதல்
சுபகிருது வருடம் மாசி மாதம் 14 திகதி வரை
(19.02.2023 ஞாயிறு முதல் 26.02.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கண்டேன் கலியுகத்தை மீட்பதற்கு
   கந்தவேலன் அம்சமாக வந்து
   தொண்டர் படை உருவாக்கி
   தூயசேவை தேசமெங்கும் ஆற்றும்
2. ஆற்றும் அரங்கனே உமைபோற்றி
   அகத்திய மகரிஷியும் வாரஆசியும்
   மாற்றம்காண இந்தியா தமிழகத்தில்
   மார்க்கமுடன் சுபகிருது சால்திங்கள்
3. திங்களில் நாததிகதிமேல் முன்னான்கீர்திகதி வரை
   தேசமெலாம் நடக்கும் வாரநிகழ்வாக
   இங்கணமே வருங்கால பலன்குறித்து
   இயம்பிடுவேன் ஆசி விளக்கம்தனை
4. தன்னிலே சமூக மாற்றமாக
   தவசி அரங்கன் ஞானவழி
   அண்ணலே என மக்களெல்லாம்
   அரங்கன் நிழல் தேடிவர
5. வருகவே வதையாக நடக்கின்ற
   வறுமை சகல சோடைகளும்
   தருமவான் அரங்கன் ஆசியால்
   தானாக அனைத்தும் சரியாகும்
6. ஆகவே மனபலம் தேகபலம்
   ஆயுள் கீர்த்தி சர்வபலமென
   செகமக்கள் அரங்கன் வழியை
   சரணாகதி கொண்டு ஏற்க
7. ஏற்கவே கலியின் தாக்கமாக
   இப்புவியில் எந்தப் பேரிடரும்
   பற்றிடா பாதுகாப்புக் கூடி
   பருவமழை பசுமை இயற்கைவளம்
8. வளமென நிலைகள் தேறி
   வளர்ச்சித் தேசமாக மாறும்
   சலனமின்றி ஆளும் சக்திகள்
   சரணாகதி தருமஞானவழி கொண்டு

9. கொண்டுமே அரங்க ஞானியை
குருவாக ஏற்று தரிசிக்க
உண்டாகும் மெய்ஞான பலம்
ஊழலில்லா ஞான ஆட்சிதரும்

10. ஆட்சிதரும் சிறந்த ஆளுமையாக
அபயமென மக்களை மீட்டு
ஆட்சிபுரியும் ஆளுமையாக மாறி
அழிவின்றி இந்தியா தமிழகம் வளரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மாசி மாதம் 07ம் நாள் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

துன்பம் மிக்க கலியுகத்தின் கோரப்பிடியில் இருந்து மக்களை மீட்பதற்கு ஞானபண்டிதன் முருகப்பெருமானின் அம்சமாக அவதரித்து தர்மபலம் தவபலம் கொண்ட தொண்டர் படையை உருவாக்கி தூய்மையான சேவைகளை நாடெங்கும் செய்து வருகின்ற மகாஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனே உம்மைப் போற்றி வணங்கியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் மாசி மாதம் 07ம் நாள் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தானதரும சிந்தை குறைந்து உள்ள இந்த சமூகத்தை மாற்றி நல்சமுதாயமாக மாறிட உண்மை தயவு நெறிகொண்ட ஞானம்மிக்க தவராசன் ஆறுமுக அரங்க மகானின் தூய ஞான நெறிக் கொள்கைகளை அரங்க மகானை குருவாக ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து வரவர சமுதாயத்தில் உள்ள வறுமை நீங்கும், சகலவிதமான குறைகளும் விலகி தருமவான் அரங்க மகானின் ஆசியினாலே தானாகவே அனைத்தும் சரியாகும்.

அரங்கர் கூறும் தயவுக் கொள்கைகளை ஏற்று நடந்தால் மனோபலம் உண்டாகும் தேகபலம் உண்டாகும் அரங்கரை சரணடைந்தால் மக்களை அச்சுறுத்தி வதைக்கும் கலியுக துன்பமெல்லாம் நீங்கும் இயற்கை பேரிடர்களால் ஆபத்துகள் வராமல் அந்த இயற்கையே பாதுகாப்பாக மாறிடும். பருவமழை தவறாது பெய்திடும், பசுமை பெருகி இயற்கை வளமும் அதிகமாகி நாடு வளர்ச்சி மிக்க நல்தேசமாக மாறிடும்.

மக்களை ஆட்சி புரியும் ஆளுமை சக்திகள் எல்லாம் அரங்கரின் கொள்கைகளை ஏற்று தயவு வழி நடந்து சரணாகதி அடைந்திட்டால் தரும ஞானவழியில் நடந்து அரங்கரை தரிசனம் செய்து வரவர அவர்களுக்கு மெய்ஞான பலம் உண்டாகும். ஊழல் இல்லாத ஞானஆட்சி உருவாகும்.

அவர்கள் ஞானஆட்சியை இந்த தேசத்திற்கு தருகின்ற மிகச்சிறந்த ஆளுமையாக மாறி மக்களை துன்பங்களில் இருந்து மீட்டு மக்களுக்கு அபயமளித்து நல்லாட்சி புரிகின்ற நல்ல ஆளுமை சக்திகளாக மாறியே அழிவிலாத இந்தியா தமிழகமாக நாடு உருவாகிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–